**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 07.03.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகம், மாணவர் நலமையத்தில் போட்டித் தேர்வு மையம் 07.03.2023 அன்று தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் பயிற்சி துறை தலைவர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்களால் தொடங்கப்பட்டது. முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் துணைவேந்தர் முனைவர். வெ.கீதாலட்சுமி வரவேற்புரை ஆற்றினார். இம்மையம் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்க, மாதிரி வினாத்தாள் பயிற்சி மற்றும் கடின உழைப்பு மிக அவசியம் என்றும், இத்தகு முயற்சிக்கு கைகொடுக்கும் வண்ணம் அண்ணா பயிற்சி நிலையம் முன் வந்துள்ளது மிகவும் பெருமை கொள்ளத்தக்கது என்றும் கூறினார். மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் இம்மையம் அமைக்கச் செய்த தமிழக அரசுக்கு தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார். மாணவர்கள் போட்டித் தேர்வை எதிர்கொண்டு, திறம்பட செயல்பட, இலவசமாக பயிற்சி அளிப்பது பல துறைகளிலும் முன்னேற வாய்ப்பளிக்கும் என்றும் தெரிவித்தார்.

முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப, அவர்கள் தனது துவக்க உரையில் மாணவர்கள் போட்டித் தேர்வு எழுதுவதின் மூலம் வேலை வாய்ப்பை பெறலாம் என்றும், கல்விக்கு இடையுறு இல்லாமல், போட்டித் தேர்வு தயார் செய்ய ஏதுவான சூழ்நிலை மற்றும் மனநிலையை ஏற்படுத்த, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகம் அமைந்துள்ளது என்றும் கூறினார். மேலும் போட்டி தேர்வுக்கு வைராக்கியமும், அதீத கவனமும், கவன சிதைவு இல்லாமலும் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும், ஆழமாக உச்சரித்து படிக்க வேண்டும் என்றும், மாணவர்கள் பலகோணத்தில் சிந்திக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். பழைய வினாத்தாள்களை புரட்டி பார்ப்பதோடு சக மாணவர்களுடன் கலந்துரையாடல், விவாதித்து படித்தல் முதலான முறைகளை கையாள வேண்டும் என்றும், நேரம் ஒதுக்குதல், இடம் ஒதுக்குதல் மற்றும் அட்டவணை கொண்டு விழிப்புணர்வோடு படித்தல் ஆகியவையே வெற்றி வாய்ப்பை உருவாக்கும் என்றும் ஊக்கப்படுத்தினார்.

மனிதவள மேலாண்மை ஆணையர் திருமதி. மைதிலி.க.ராஜேந்திரன், அவர்கள் காணொளி வாயிலாக வழங்கிய வாழ்த்துரையில் இப்போட்டித் தேர்வு மூலம் வேலைவாய்ப்பு பெற, வாழ்க்கையில் முன்னேற இம்முயற்சி முதல் படியாக இருக்கும் என்றும், திறன்மேம்பாடு மூலம் பலதுறைகளிலும் முன்னேற மாணவர்கள் முன் வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

இணையவழி மற்றும் நேரடி பங்கேற்பாக ஏறத்தாழ ஆயிரத்திற்கும் அதிகமான இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் உறுப்பு மற்றும் கிளைக் கல்லூரிகளிலும் மற்றும் கோவையில் உள்ள மற்ற உயர்கல்வி நிறுவனங்களில் இருந்தும் கலந்துகொண்டு பயன் பெற்றனர். இறுதியாக மாணவர் நலமைய முதன்மையர், முனைவர். நா.மரகதம், நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**